# வேதாகமத்தில் படிமக் கூறுகள்

# Figurative Elements in Holy Bible

**பா. விஜயபிரபா**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), சூலூர்.

**P. Vijayaprabha**, Ph.D Researcher, Ratnavel Subramaniam College of Arts and Sciences, Sulur, Tamil Nadu.

ORCID ID:https://orcid.org/0009-0003-1345-4298

**DOI : 10.5281/zenodo.10005057**

## Abstract

The Holy Bible is the principle of love to love others as yourself. Since its inception, France has undergone many changes and appearances. The reason for this is the development of knowledge in people's thinking and their social customs. In this, many revolutionary historical events between many countries of the world; Unseen scientific oddities; and the maturation of knowledge that occurs in the development of civilization; Many supernatural miracles and wonders are happening. Fundamental changes in the development of human civilization, conflict within humans, dehumanized society are all seen in society. To calculate precisely when all this happened B.C. - AD It is calculated according to the birth of Jesus Christ. The life of Jesus Christ is a precedent for the world in terms of defining history. According to world history researchers, it is clear that Jesus Christ has brought about the most revolutionary change in the world.

## ஆய்வுச்சுருக்கம்

உன்னைப்போல பிறனையும் நேசிக்க வேண்டும் என்ற அன்பின் கோட்பாடுதான் பரிசுத்த வேதாகமமாகும். இப்பிரபஞ்சம் தோன்றியது முதல் இன்று வரை எத்தனையோ விதமான மாற்றங்களும் தோற்றங்களும் உருவாகியுள்ளன. இதற்குக் காரணம் மக்களின் சிந்தனையில் ஏற்படும் அறிவின் வளர்ச்சியும், அவர்களின் சமுதாயப் பழக்க வழக்கங்களும் ஆகும். இதில், பல உலக நாடுகளுக்கிடையேயான புரட்சிகரமான பல வரலாற்றுச் சம்பவங்களும்; கண்ணுக்குப் புலப்படாத அறிவியல் விந்தைகளும்; நாகரீக வளர்ச்சியில்

ஏற்படும் அறிவின் முதிர்ச்சியும்; இயற்கையை மிஞ்சிய அநேக விதமான அற்புதங்களும் அதிசயங்களும் நடந்து கொண்டே இருக்கின்றன. மனித நாகரிக வளர்ச்சியின் அடிப்படை மாற்றங்கள், மனிதர்களுக்குள்ளான முரண்பாடு, மனிதத் தன்மையிழந்த சமூகம் என அனைத்தும் சமூகத்தில் காணப்படுகின்றன. இவையெல்லாம் எப்பொழுது நடந்தது என்று துல்லியமாகக் கணக்கிட கி.மு. - கி.பி. என்ற இயேசுகிறிஸ்துவின் பிறப்பை வைத்தே கணக்கிடப்படுகிறது. வரலாற்றைத் தீர்மானித்தல் என்ற அடிப்படையில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை உலகத்திற்கான முன்னோடியாகத் திகழ்கிறது. உலக வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் மிகவும் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகிறது.

**Key words:** வேதம், கிறிஸ்தவம், இனம், மொழி, கவிதை, உருவம், Scripture, Christianity, Race, Language, Poetry, Imagery

**முன்னுரை**

வேதாகமம் கிறித்துவச் சமயத்தின் ஆணிவேராக உள்ளது. அந்த வேதாகமத்தில் அமைந்துள்ள பாடல்கள் இலக்கிய நயம் மிக்கவையாக உள்ளன. மனிதர்களுக்கு அறத்தைப் போதிப்பதுடன், மனிதர்கள் இன்னல் நிறைந்த வாழ்க்கையிலிருந்து வெளியேறி இன்பமான வாழ்வை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை இது காட்டுகிறது. அவ்வகையான வேதாகமம் கவிதை நயத்துடன் படிமக் கூறுகளுடன் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. அந்தப் படிமக் கூறுகள் எத்தன்மைகளில் வெளிப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**வேதாகமம்**

**“தங்கத்தை நிறுத்துப் பார்ப்பதற்குத் தராசு முக்கியம்**

**வரலாற்றைப் புரிந்து கொள்வதற்குப் பூகோள அறிவு**

**அதனினும் முக்கியம்” (சி.உ.செ. ப. 57)**

என்று கவிப்பேரரசு வைரமுத்து கூறியுள்ளார்.

இயேசுகிறிஸ்து அன்பிற்கு இலக்கணமாகவும், இரக்கத்தின் உருவமாகவும், கருணைக் கடலாகவும், ஆதரவற்றோருக்கு அன்பின் முகவரியாகவும் வாழ்ந்து காட்டியுள்ளார். “ஒரு விலங்கைப்போல நான் தெருக்களில் திரிந்தலைந்தேன் இன்றோ நீங்கள் காட்டும் அன்பில்,

உங்கள் கவனிப்பில் ஒரு தேவதைபோல் இறக்கப்போகிறேன் என்றான்". (பா. கண்ணன், அ.தெ., ப.45)

வேதாகமத்தில் காணப்படும் வசனங்களின் கருப்பொருள் அன்பின் வெளிப்பாடாகவும், நற்கிரியைகளின் செயல் வடிவமாகவும், சமுதாயச் சீர்திருத்தத்தின் நிலைப்பாடாகவும் உள்ளது.

**"ஒரு மரத்தில் கனிகள் இருக்குமானால், அந்தக் கனிகளால் அந்த மரத்திற்கு எந்த விதமான பிரயோஜனமும் இருக்காது. ஆனால், அந்தக் கனிகள் மனிதர்களுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் பிரயோஜனப்படும்." (ஆவி கனி., பக் 7)** என்று மோகன் சி. லாசரஸ் கூறியுள்ளார். இவ்வாறாகக் கிறிஸ்தவர்கள் வாழவேண்டும் என்று வேதம் கூறுகிறது.

**அடிக்கருத்தியல்**

**"வேதவாக்கியங்களெல்லாம்**

**தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது'**

**தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,**

**எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும்**

**இருக்கும்படியாக, அவைகள்**

**உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும்,**

**சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்**

**பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (2. தீமோத்தேயு, 3:16-17)**

உலக மக்கள் அனைவரும் சாதி, சமய, இன, மொழி, நாடு, நிறம் ஆகிய வேற்றுமைகளைக் கலைந்து அன்பின்பால் வேரூன்றி சண்டையில்லாத சமரச வாழ்வை வாழவேண்டும் என்ற உன்னதச்சிந்தனையே பரிசுத்த வேதாகமமாகும்.

இவ்வாறாக, உலக மக்கள் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இயேசு கிறிஸ்துவின் அன்பின் வாழ்ந்தால், சமூக நீதிக்கான போராட்டங்கள் எல்லாம் மனித நேயத்தின் தேரோட்டங்களாக மாறிவிடும்; அன்பு வற்றிய மனக்குளத்தில் பண்பின் பனிமலர் பூத்து நிற்கும்; வெடியின் சத்தங்கள் எல்லாமே நல் விடியலின் நிசப்தங்களாக மாறிவிடும்; இனமொழி வேறுபாடுகள் எல்லாம் மனித ஒருமைப்பாட்டின் இனிய கனிகளாகும்.

**"சமயம் மனிதனை நெறிப்படுத்துவது, முறைப்படுத்துவது, சமயம் ஒரு தூய்மையான வாழ்க்கை முறை, சமய வாழ்க்கையில் புலன்கள் தூய்மையடையும், …………………………… ஒருலகம் மலரும் இதுவே சமயத்தின் பயன்" (2007, ப. 126)**

என்று குன்றக்குடி அடிகளார் கூறியுள்ளார்.

வேதாகமத்தின் கவிதைகள் எல்லாமே வசனங்கள் என்றே அழைக்கப்படுகிறது. இவைகள் உலக மக்களின் வாழ்வை சீர்படுத்திப் புதுவாழ்வைத் தருகிறதாய் அமைந்துள்ளன.

இப்பரிசுத்த வேதாகமத்தில், இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியமங்களும், நியாயப்பிரமாணங்களும், உடன்படிக்கைகளும், பத்துக்கட்டளைகளும் இயேசு சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகளும், இயேசுகிறிஸ்துவின் போதனைகளும் மனித வாழ்வை சீர்படுத்துவதாக அமைந்துள்ளன.

**புதுக்கவிதை**

தமிழ் கவிதையுலகில் காலவேகத்தால் ஏற்பட்ட ஒரு பரிணாமம் புதுக்கவிதையாகும். இதன் உருவமும், உள்ளடக்கமும் பலவாகப் பிரதிவாதிகளை ஏற்படுத்தியுள்ளன. 1960-களில் தமிழ்க்கவிதைகளில் மலர்ச்சியுள்ள புதுமைக்குப் புதுக்கவிதை என்னும் பெயர் சூட்டப்பட்டது. நியூபொயட்ரி என்றும் மாடர்ன் பொயட்ரி என்றும் ஆங்கிலத்தில் கூறப்படுவதையொட்டித் தமிழில் புதுக்கவிதை அசுர வளர்ச்சிபெற்றது. அமெரிக்க கவிஞன் வால்ட்விட்மன் எழுதிய புல்லின் இதழ்கள் என்னும் கவிதைத் தொகுப்பு கவிதை உலகின் யாப்புச்சுவர்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்கியது.

**"புதுக்கவிதை**

**என்பது**

**சொற்கள் கொண்டாடும்**

**சுதந்திரதின விழா" (1985, ப. 30)**

எனக் குறிப்பிடுகிறார் வைரமுத்து.

**"யாப்புடைத்த கவிதை**

**அணையுடைத்த காவிரி**

**யாப்பற்ற கவிதை**

**இயற்கை யெழில் இருக்க**

**செயற்கையணி எதற்கென்று**

**உடையுடன் ஒப்பனையும்**

**நீக்கிவிட்ட கன்னி" (2021, ப. 40)**

பலவிதப் புதிய பண்புகளுடன் யாப்பை மீறிய புதுக்கவிதைகள் படைக்கப்படுகின்றன. பாமரனுக்கும் புரிகிற விதத்தில் சி. மணியின் புதுக்கவிதை வரிகள் புதுமையான எழிலைப் பறைசாற்றுகிறது.

**கிறித்துவ வேதாகமத்தில் புதுக்கவிதையின் உத்திமுறைகள்**

**"கவிதை இனிமை வாய்ந்ததும் பயனுடையதும் என்பது ஓரேசு என்பவரின் கருத்தாகும்." (2007, ப. 62).** ஓர் இலக்கியப் படைப்பு கற்பவரைச் சென்றடையத் தேவையான இன்றியமையாத கூறுகளுள் ஒன்று உத்தியாகும். கலையாக்க முறைகளில் முதன்மையானதாக அமைவது உத்தி முறைகள். காலந்தோறும் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்றனர். இந்த உத்தி முறைகளே. புதுக்கவிதைக்கு நவீனத் தன்மையை அளிக்கின்றன.

புதுக்கவிதைகளில் உத்திகளைக் கையாளுவதற்குக் காரணம் கருத்துச்செறிவு, கவிதைச்சுருக்கம், சொற்சுருக்கம், பன்முகப் பொருள் காட்டல், வாசகரை ஈர்த்தல், வாசகரைச் சிந்திக்க வைத்தல், கலைத்திறனுக்கேற்ற பொருள் தருதல், கருத்தினை மனதில் படமாகப் பதிய வைத்தல் முதலானவை ஆகும்.

சமயநூலான விவிலியத்தில் இவ்வகையான உத்திமுறைகள் மனிதனை நல்வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கியநூல்கள், கவிதைநூல்கள் போலவே விவிலியத்திலும், புதுக்கவிதையின் உத்திமுறைகள் மிகச்சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டு புதுக்கவிதையின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. கவிதையின் வெற்றி என்பது அக்கவிதையைப் படித்தவுடன் நம்மை அக்கவிதையானது கட்டிப்போட்டுவிடச் செய்வதாகும். அந்தக் கவிதையின் செறிவான வரிகள் நம் நினைவலைகளில் புது இன்பத்தை விதைத்துச்செல்லும்.

இவ்வாறாக, வேதாகமத்தின் வசனங்கள் புத்தியைத் தெளிவிக்கிறதுமாயும், கண்ணீரைத் துடைக்கிறதுமாயும், ஏசுவைச் சார்ந்து வாழ்க்கையில் தான் அசைக்கப்படுவதில்லை என்ற விசுவாச நம்பிக்கையில் வசனங்கள் மனவெழுச்சி கொள்ளச் செய்கிறது.

**படிமக் கவிதைகள்**

படிமம் (Image) என்றால் காட்சி என்பது பொருள். விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்திமுறையே படிமமாகும். கருத்துத்தன்மையுள்ள

ஒன்றுக்கு, ஒப்பீட்டைக்காட்டி காட்சித்தன்மை தரலாம், கருத்துகளைப் புரியவைக்கலாம், காட்சிக்குத் தெளிவு தருவதும் கருத்தைக் காட்சிப்படுத்துவதும் படிமத்தின் பணிகளாகும். படிமத்தை உருவாக்க உவமை, உருவகம் சொல்லும் முறை போன்றவை பயன்படுகின்றன. சொற்களால் நெஞ்சத்தில் வரையும் ஓவியம் படிமமாகும்.

**படிமம் பற்றிய இளம்பூரணர் கூற்று**

படிமம் கருப்பொருளைச் சொல்லி அதனோடு தொடர்புடைய நுண்பொருளை உணர்த்தும். கருத்துத்தொடர்பு உவமைத்தொடர்புகளைப் படிமம் உணர்த்தும். சொல்லப்பட்டதிலிருந்து சொல்லப்படாததை உணர்த்தும் கருவியாகப் படிமம் செயல்படுகிறது. படிமம் சொல்ல வந்ததை சுருக்கமாக, மறைமுகமாகச் சொல்லும் இயல்புடையது. (2007, ப. 66)

சங்க இலக்கியங்கள் காட்சிதரும் உவமைகளையே கொண்டுள்ளன. படிமம் காட்சி தரும் உத்தி என்பதால் காட்சி தரும் உவமைகளை மட்டும் அது பயன்படுத்திக்கொள்கிறது. அந்தவகையில் உவமைக் கோட்பாடு படிமத்திற்குத் தோற்றுவாயாக இருக்கிறது.

**"காலை இளம் வெயில்**

**நன்றாக மேய**

**தும்பறுத்துக்**

**துள்ளிவரும்**

**புதுவெயில்" (2007, ப. 123)**

என்ற கவிதையை கல்யாண்ஜி வினை சார்ந்த கவிதையாக்கியுள்ளார். இணைத்துக் கட்டப்பட்ட தும்பிலிருத்து அறுத்துக் கொண்டு கன்று துள்ளிக்குதித்தல் என்பது எல்லோரும் அறிந்த ஒரு காட்சியாகும். இக்காட்சியைக் கொண்டு காலை இளம் வெயிலின் அழகைக் கன்றின் செயலோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

**கிறித்துவ வேதாகமத்தில் படிமக்கவிதைகள்**

உவமை, உருவகம் போலப் படிமமும் வினை (தொழில்), பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

**வினைப்படிமம்**

சங்கீதத்தில் இடம் பெறும் வசனமானது,

**"கடலே!**

**நீ விலகியோடுகிறதற்கும்**

**யோர்தானே!**

**நீ பின்னிட்டுத் திருப்புகிறதற்கும்**

**மலைகளே**

**நீங்கள் ஆட்டுக்கடாக்களைப் போலவும்**

**குன்றுகளே**

**நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப் போலவும் துள்ளுகிறதற்கும்**

**உங்களுக்கு என்ன வந்தது?" (சங்கீதம் 114 : 3-6)**

கடல், யோர்தான், மலைகள், குன்றுகள் இவை எல்லாம் தேவனுடைய மகிமையையும், பிரசன்னத்தையும் வெளிப்படுத்துகிறது. எகிப்து தேசத்தில் அடிமைகளாய் இருந்தவர்கள் தேவனின் பலத்த செயல்களினால் சுதந்தரவாளிகள் ஆனார்கள். யூதா, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள், அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மலைகள் ஆட்டுக்கடாவிற்கும், குன்றுகள் ஆட்டுக்குட்டியாகவும் உவமையாகக்கூறி காட்சியமைக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை விட்டு விலகுவதற்கு உங்களுக்கு என்ன வந்தது, மூர்க்ககுணம் கொண்ட ஆட்டுக்கடாபோல் துள்ளுவதற்கும், ஆட்டுக்குட்டி போல் துள்ளுவதற்கும் என்ன நேர்ந்தது. கர்த்தர் கன்மலையைத் தண்ணீர் தடாகமாகவும், கற்பாறையை நீருற்றுககளாகவும் மாற்றுகிறவர். அவருடைய வல்லமையான செயல்களைக் கண்டு மகிமைப்படுத்து, யூதா அவருக்குப் பரிசுத்த ஸ்தானமும் இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று என்று கூறி தேவ பிரசன்னத்தை உவமைகள் வழியே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது வினை படிமமாகும்.

**பயன் படிமம்**

சாலமோன் ஞானி எழுதிய நீதிமொழிகள் என்னும் வேதப்பகுதியில் இடம்பெறும் வசனமானது,

**"ஏற்ற சமயத்தில்**

**சொன்ன வார்த்தை**

**வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட**

**பொற்பழங்களுக்குச் சமானம்." (நீதிமொழிகள் 25:11)**

சிந்தித்துச் சொல்கின்ற வார்த்தைகள் ஒருவருக்கு மென்மையான உணர்வை ஏற்படுத்தும். சரியான நேரத்தில் சொல்லப்படும் அன்பான வார்த்தை புது உத்வேகத்தைத் தருவதாக அமையும், வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழம் மிகவும் மதிப்பானது. விலையேறப்பெற்றது; வெள்ளித்தட்டு தூய்மையானது வெண்மையானது; பழம் இனிமையானது; அனைவராலும் விரும்பப்படுவதாகும். ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை பொற்பழத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. உயர்ந்த பண்புகளைக் கொண்ட இவ்வார்த்தைகள் மற்றவர்களுக்குப் பயனுள்ளதாய் அமையும். இது பயன் சார்ந்த படிமமாகும்.

**வடிவப்படிமம்**

யோபு புத்தகத்தில் இடம்பெறும் கவிதையானது,

**"இப்போதும் பிகெமோத்தை நீ கவனித்துப்பார்;**

**உன்னை உண்டாக்கினதுபோல அதையும் உண்டாக்கினேன்;**

**அது மாட்டைய்போல் புல்லைத்திண்ணும்;**

**இதோ, அதினுடைய பெலன்;**

**அதன் இடுப்பிலும்;**

**அதன் வீரியம் அதன் வயிற்றின் நரம்புகளிலும் இருக்கிறது;**

**அது தன் வாலைக் கேதுரு மரத்தைப்போல் நீட்டுகிறது;**

**அதின் இடுப்பு நரம்புகள் பின்னிக்கொண்டிருக்கிறது;**

**அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப் போலவும்,**

**அதின் அஸ்திகள் இரும்புக் கம்பிகளைப் போலவும் இருக்கிறது.**

**(யோபு 40 : 15 -18)**

பிகெமோத் என்பது உவமைகளின் வழியே அதன் உருவத்தை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விலங்கு அழிக்கப்பட்ட உயிரினமாகக் கருதப்படுகிறது. விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் பிகெமோத் என்பது டைனோசர் என்ற ஆராய்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

மாட்டைப் போல் புல்லைத்தின்னும் அந்த அளவிற்கு உயரம் என்றும், கேதுருமரத்தைப் போல் தன்வாலை நீட்டுகிறது. வாலின் நீளம் பெரியது என்றும், அதன் எலும்புகள் கெட்டியான வெண்கலம் போன்றது, அதன் பெலன் இடுப்பிலும் அதன் அஸ்திகள் இரும்புக் கம்பிகள் போலவும் உள்ளதாக வேதாகமம் இப்பிகெமோத்தை காட்சிப்படுத்தியுள்ளது.

**நிறப்படிமம்**

**“உன்னதப்பாட்டில் இடம்பெறும் வசனமானது,**

**சந்திரனைப்போல் அழகும்,**

**சூரியனைப்போல் பிரகாசமும்,**

**கோடிகள் பறக்கும் படையைப்போல்,**

**கெடியுமுள்ளவளாய் அருணோதயம்போல்**

**உதிக்கிற இவள் யார்?” (உன்னதப்பாட்டு, 6:10)**

சந்திரனின் நிறம் வெண்மையான குளிர்ச்சியும், சூரியனின் மஞ்சள் நிறங்கொண்ட பிரகாசமும் படைக்களத்தில் பலவர்ணக் கொடிகள் போர் நெறியுடன் காணப்படுவது போலவும், அழகில் அருணோதயம் போல் உதிக்கிற இவள் யார்? என்று கேட்பதில், நெஞ்சத்திலே ஆனந்த பரவசம் காணமுடிகிறது. இங்கே பல நிறங்கள் உவமைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளதால் இது நிறம் சார்ந்த படிமக் கவிதையாகும்.

**முடிவுரை**

கிறித்துவ வேதாகமத்தின் வசனங்கள் எல்லாம் சமத்துவச்சங்கில் வார்க்கப்பட்ட மனிதநேயத்தின் மாண்புகளேயாகும். ஏற்றத்தாழ்வுகளால் புறக்கணிக்கப்பட்டோர்களுக்கான புரட்சிக்கீதங்களேயாகும். சிலுவையின் அன்பை ருசித்தவர்கள் எல்லோருமே அன்பென்னும் சாவி கொண்டு, வாழும்போதே பரலோகத்தின் பேரின்பத்தைப் பெற்றவர்களாகவே கருதப்படுகின்றனர். புதுக்கவிதையின் இன்பம், மறுவாழ்வின் மகிழ்ச்சி, பகுத்தறிவுச் சிந்தனை மூன்றும் ஒன்றாய் கலந்து, முத்தமிழின் இலக்கிய, இலக்கண இன்பத்தையும் இவ்வேதாகமம் அள்ளித்தருகிறதுமாய் அமைந்துள்ளது.

வேதாகமத்தில் காணப்படும் வசனங்களின் கருப்பொருள் அன்பின் வெளிப்பாடாகவும், நற்கிரியைகளின் செயல் வடிவமாகவும், சமுதாயச் சீர்திருத்தத்தின் நிலைப்பாடாகவும் உள்ளது.

வேதாகமத்தின் வசனங்கள் புத்தியைத் தெளிவிக்கிறதுமாயும், கண்ணீரைத் துடைக்கிறதுமாயும், ஏசுவைச் சார்ந்து வாழ்க்கையில் தான் அசைக்கப்படுவதில்லை என்ற விசுவாச நம்பிக்கையில் வசனங்கள் மனவெழுச்சி கொள்ளச் செய்கிறது.

**துணை நூற்பட்டியல்**


1. வைரமுத்து, 1985. **சிறப்பியே உன்னைச் செதுக்குகிறேன்.** (முதல் பதிப்பு). சூர்யா இலக்கியம், சென்னை.
2. கண்ணன், ப., 2012. **அன்னை தெரேசா**. இரண்டாம் பதிப்பு. விஜயா பதிப்பகம், கோயமுத்தூர்.
3. ஞானமூர்த்தி, தா.ஏ., 1996. **இலக்கிய திறனாய்வியல்**, முதல் பதிப்பு. யாழ் வெளியீடு, சென்னை.
4. மோகன் சி லாசரஸ், 2021. **ஆவியின் கனி**, முதல் பதிப்பு. இயேசு விடுவிக்கிறார் பதிப்பகம், தூத்துக்குடி.
5. பூரணச்சந்திரன், க., இந்திராமனுவேல், விஜயராணி, இரா., மோறிஸ் ஜாய், இரா., புவியரசு, அ., 2007. **தொண்ணூறுக்குப்பின் புதுக்கவிதை**, முதற்பதிப்பு. ஸ்ரீநிதி ஆப்செட் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.
6. காசிராசன், இரா., ஜெயலட்சுமி, வெ., 2007. **இலக்கியமும் சமூகமும் – பன்முகப்பார்வை**, முதல் பதிப்பு. ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை.


## Bibliography


1. Vairamuthu, 1985. I will carve your beauty. (First Edition). Surya Literature, Chennai.
2. Kannan, P., 2012. Mother Teresa. Second edition. Vijaya Publishing House, Coimbatore.
3. Gnanamurthy, T.A., 1996. Literary Criticism, First Edition. Jaffna Publication, Chennai.
4. Mohan C Lazarus, 2021. The Fruit of the Spirit, First Edition. Jesus Delivers Publishing House, Thoothukudi.
5. Pooranachandran, K., Indramanuel, Vijayarani, I., Morris Joy, I., Buviarasu, A., 2007. New Poetry of the Nineties, First Edition. Srinidhi Offset Printers, Tiruchirappalli.

6. Kasirasan, I.R., Jayalakshmi, V., 2007. Literature and Society – A Multifaceted Perspective, First Edition. Njalat Institute of Tamil Culture, Madurai.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**விஜயபிரபா. பா " வேதாகமத்தில் படிமக் கூறுகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 4, அக்டோபர் 2023, பக். 67-77

**Cite this Article in English**

**Vijayaprabha. P " Figurative Elements in Holy Bible"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 4, October 2023, pp. 67-77